# பதிவுசெய்து, வாக்களிக்கத் தயாராகுங்கள்



ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI

## வாக்களிக்க, ஏன் பதிவு செய்ய வேண்டும்?

நீங்கள் வாக்களிக்கப் பதிவு செய்யப்பட்டிருந்தால், பொதுத் தேர்தல்கள், உள்ளாட்சித் தேர்தல்கள் மற்றும் பொது வாக்கெடுப்புகளில் பங்குபெறலாம். நீங்கள் அக்கறை கொள்ளும் பிரச்சினைகளுக்கு யாரைப் பிரதிநிதிகளாக அமர்த்தலாம் என்பது குறித்து உங்கள் கருத்தைக் கூறுவதற்கான வாய்ப்பு இந்த தேர்தல்கள்.

**வாக்களிக்க பதிவு செய்வதன் மூலம் உங்கள் குரல் கேட்கப்படுவதை நீங்கள் உறுதி செய்யலாம்.**

## வாக்களிக்க யாரெல்லாம் பதிவுசெய்யலாம்?

நீங்கள் பின்வரும் தகுதியுடன் இருந்தால், கண்டிப்பாகப் பதிவுசெய்ய வேண்டும்:

- உங்களுக்கு வயது 18 அல்லது அதற்குமேல் இருந்தால், மேலும்
- நீங்கள் ஒரு நியூசிலாந்து குடிமகன்/குடிமகள் அல்லது ஒரு நியூசிலாந்து நிரந்திர குடியிருப்பாளர், மற்றும்
- உங்கள் வாழ்க்கையில், ஏதேனும் சமயத்தில், ஒரு வருடத்திற்கும் மேலாக தொடர்ச்சியாக நியூசிலாந்தில் வசித்திருக்கிறீர்கள்.

நீங்கள் ஆஸ்திரேலிய நாட்டவர், கூக் ஐலேண்ட் மாவோரி, நியூவே நாட்டவர் அல்லது டோக்கெலாவ் பகுதியைச் சேர்ந்தவராக இருந்து, நியூசிலாந்தில் தொடர்ச்சியாக 12 மாதங்கள் வசித்திருந்தால் நீங்கள் பதிவுசெய்யலாம்.

நீங்கள் வெளிநாட்டில் வசிப்பவராக இருந்தால், பின்வரும் தகுதிகள் இருக்குமாயின் வாக்களிக்கப் பதிவு செய்யலாம்:

- நீங்கள் கடந்த ஆறு ஆண்டுகளில், நியூசிலாந்தில் வசித்திருக்கும் ஒரு நியூசிலாந்து குடிமகன்/குடிமகள் அல்லது
- நீங்கள் கடந்த நான்கு வருடங்களில், நியூசிலாந்தில் வசித்திருக்கும் நியூசிலாந்தின் ஒரு நிரந்தர குடியிருப்பாளர்.

2023 தேர்தலுக்குப் பின், நியூசிலாந்து குடிமக்களுக்கு இது மூன்று ஆண்டுகள் எனவும், நியூசிலாந்து நிரந்தர குடியிருப்பாளர்களுக்கு 12 மாதங்கள் எனவும் மீண்டும் மாறும்.

தேர்தல் பொறுத்தவரை, ஒரு நிரந்தர குடியிருப்பாளர் என்பவர், நியூசிலாந்தில் சட்டப்பூர்வமாக வாழும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வெளியேற தேவை இல்லாத ஒருவராகும். குடியுரிமை விசாவில் உள்ள ஒருவரும் இதில் அடங்குவார்.

நீங்கள் 17 வயதை அடைந்தவுடன் பதிவு செய்யலாம். நீங்கள் 18 வயது அடைந்ததும், நீங்கள் தானாகவே பதிவு செய்யப்படுவீர்கள்.

## நான் எவ்வாறு பதிவு செய்வது?

பதிவு செய்வது அல்லது உங்கள் விவரங்களைப் புதுப்பிப்பது எளிதாகும். நீங்கள்:

- இணையம் மூலம் பதிவு செய்ய **vote.nz** வலைத்தளத்திற்கு சென்று, உங்கள் நியூசிலாந்து ஓட்டுநர் உரிமம், நியூசிலாந்து பாஸ்போர்ட் அல்லது RealMe சரிபார்க்கப்பட்ட அடையாளத்தைப் பயன்படுத்தலாம்
- **0800 36 76 56** என்ற கட்டணமில்லா எண்ணுக்கு அழைத்து, உங்களுக்கு ஒரு படிவத்தை அனுப்பச் சொல்லிக் கேட்கலாம்

நீங்கள் பதிவு செய்ததும், உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் சேரும். வாக்களிப்பதற்கு நீங்கள் கட்டாயமாக வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு முறை நீங்கள் வீடு மாறும் போதும் உங்கள் விவரங்களைப் புதுப்பிக்க வேண்டும்.

## உங்கள் தனிப்பட்ட பாதுகாப்பு பற்றிக் கவலையா?

உங்கள் தனிப்பட்ட பாதுகாப்பு அல்லது உங்கள் குடும்பத்தின் பாதுகாப்புக் குறித்து நீங்கள் கவலைப்படுகிறீர்கள் என்றால், இரகசியமான வெளியிடப்படாத பட்டியலில் சேர்க்கப்பட நீங்கள் விண்ணப்பிக்கலாம். உங்கள் பதிவு விவரங்களை நாங்கள் பாதுகாப்பாக வைத்திருப்போம், அவற்றை யாருக்கும் கொடுக்க மாட்டோம்.

கூடுதல் தகவலுக்கும், விண்ணப்பப் படிவத்துக்கும் **vote.nz** வலைத்தளத்திற்குச் செல்லவும் அல்லது **0800 36 76 56** என்ற எண்ணை அழைக்கவும்.

## பதிவு செய்ய உதவி தேவையா?

சேர்க்கைப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு உதவிட அல்லது உங்களுக்காக உங்கள் படிவத்தைப் பூர்த்தி செய்திட, உங்கள் நண்பர் அல்லது குடும்பத்தினர் போன்ற உங்களுக்குத் தெரிந்த ஒருவரிடம் நீங்கள் கேட்கலாம், அல்லது எங்கள் சேர்க்கைப் பதிவு குழுவைக் கேட்கலாம்.

நீங்கள் படிவத்தில் கையொப்பமிட வேண்டும்.

உடல் அல்லது மனநலக் கோளாறு காரணமாக, தங்கள் சேர்க்கைப் படிவத்தைப் பூர்த்தி செய்து, கையொப்பமிட இயலாத யாரையும் உங்களுக்குத் தெரிந்தால், நீங்கள் அவர்களுக்கு உதவலாம்.

வாக்களிக்கப் பதிவுசெய்ய யாருக்கேனும் உதவுவது குறித்து மேலும் அறிய **vote.nz** வலைத்தளத்திற்கு சென்று பார்க்கவும்.

## நீங்கள் மாவோரியாக இருந்தால், வாக்களிக்கப் பதிவுசெய்தல்

நீங்கள் மாவோரி வம்சாவளியைச் சேர்ந்தவராகவும், முதன்முறையாகப் பதிவு செய்பவராகவும் இருந்தால், நீங்கள் மேற்கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான தெரிவு உள்ளது. பொதுப் பட்டியல் அல்லது மாவோரி பட்டியல், இதில் நீங்கள் எந்த வாக்காளர் பட்டியலில் இருக்க விரும்புகிறீர்கள் என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். பொதுத் தேர்தலில் எந்த வாக்காளர் குழுவிற்கு வாக்களிக்கப் போகிறீர்கள் என்பதை உங்கள் தேர்வு தீர்மானிக்கும்.

நீங்கள் பொது வாக்காளர் பட்டியலைத் தேர்ந்தெடுத்தால், பொது வாக்காளர் குழுவைச் சார்ந்த ஒரு வேட்பாளருக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள்.

நீங்கள் மாவோரி வாக்காளர் பட்டியலைத் தேர்ந்தெடுத்தால், மாவோரி வாக்காளர் குழுவைச் சார்ந்த ஒரு வேட்பாளருக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள்.

எந்தப் பட்டியலில் இருந்தாலும், அதே அரசியல் கட்சிகளின் பட்டியலுக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள்.

நீங்கள் தேர்வுசெய்யும் பட்டியலானது, உள்ளூர் தேர்தல்களில் நீங்கள் வாக்களிக்கும் முறையின் மீது தாக்கம் கொண்டிருக்கலாம். மாவோரி பட்டியலில் நீங்கள் இருந்து, உங்கள் உள்ளூர் அதிகாரிசபை ஒரு மாவோரி வார்டு அல்லது தொகுதியைக் கொண்டிருந்தால், மாவோரி வார்டு அல்லது தொகுதியில் உள்ள பிரதிநிதிக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள்.

பொது தேர்தல் மற்றும் உள்ளூர் தேர்தல்களுக்கு முன் 3 மாதங்களுக்குள்ளும், ஒரு பாராளுமன்ற இடைத் தேர்தலுக்கு முன் சில சூழ்நிலைகளிலும் தவிர, நீங்கள் இருக்கும் பட்டியலை நீங்கள் மாற்றிக் கொள்ளலாம்.

## கூடுதல் தகவல் தேவைப்படுகிறதா?

பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் குறித்து கூடுதல் தகவல்களுக்கு:

- **vote.nz** வலைத்தளத்திற்குச் சென்று பார்க்கவும்
- **0800 36 76 56** என்ற எண்ணை அழைக்கவும்

பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் குறித்த தகவலானது **vote.nz** வலைத்தளத்தில் பல மொழிகளில் உள்ளது.

ELECTORAL COMMISSION
TE KAITIAKI TAKE KŌWHIRI

ROE47 05/23_Tamil